சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை 08

ந.க.எண் 8945 /அ5/2023 நாள் 16.11.2023

பொருள் பள்ளிக்கல்வி . சென்னை மாவட்டம் . 2023 - 2024 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் -பள்ளி மாணவர்கள் பெயர்ப்பட்டியல்EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல்- மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் குறித்து அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக

பார்வை சென்னை -06 அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் . ந.க, .எண் 016387/ப்1/2023 நாள் 16.11.2023

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் இத்துடன் இணைத்து அனைத்து வகை பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்களுக்கு அனுப்பப்படுகின்றன. 2023 - 2024 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு EMIS-ல் பதிவேற்றம் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் அவர்களின் செயல்முறைகளில் உள்ளவாறு பள்ளி மாணவர்களின் தகவல்களைப் பயன்படுத்தியே 2023 2024 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட உள்ளதால் அனைத்து உயர்நிலை / மேல்நிலைப்பள்ளித்தலைமையாதசிரியர்களும், 16.11.2023 முதல் 30.11.2023 வரையிலான நாட்களில் EMIS ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User Id மற்றும் Password ஐ பயன்படுத்தி EMIS Portal சென்று தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது மேற்குறிப்பிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா என்பதனையும் , மாணவரின் பெயர், பிறந்ததேதி , புகைப்படம் மற்றும் பாடத்தொகுப்பு ஆகிய விவரங்கள் உள்ளதா என்பதனையும் சரிபார்த்து திருத்தங்கள் இருப்பின் உடன் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும், EMIS Portalல் உள்ள மாணவரது பெயர் / பெற்றோரது பெயர் உள்ளிட்ட தமிழில் உள்ள விவரங்கள் அனைத்தும் UNICODE Font-ல் மட்டுமே இருத்தல் வேண்டும் வேறு ஏதேனும் தமிழ் Font-ல் விவரங்கள் இருந்தால் அதனை

முழுமையாக நீக்கம் ( Delete) செய்து விட்டு UNICODE Font-ல் மீண்டும் பதிவேற்றம் செய்தல் வேண்டும் என அரசுத்தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

எனவே அனைத்து வகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் 16.11.2023 முதல் 30.11.2023 வரைக்குள் இப்பணியினை முடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகைப்பள்ளித்தலைமையாசிரியர்கள்/முதல்வர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பணியினை விரைந்து முடிக்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்

16/11/23

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

16/11/2023

பெறுநர்

1 அனைத்து வகைப்பள்ளித்தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் சென்னை மாவட்டம்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்

3 சென்னை-03 கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.

நகல்

1 சென்னை-06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

2 சென்னை-06 அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.